**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

இயேசு கூறுகிறார்: "நானே வாயில், என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை"

(யோவா. 10: 9)

"நானே நல்லாயன்" என இயேசு அறிவிப்பார். அவரது மந்தை நாம். இயேசு நம்மை அறிவார், நாம் அவரை அறிவோம். நமக்காக தமது உயிரை அவர் கொடுத்தார். நம்மோடு இயேசு கொண்டிருக்கும் அணுக்கமான உறவு, நல்லாயனைக் சுட்டுகிறது. அவர் நமக்குப் பொறுப்பு ஆகிறார். நல்லாயன் தமது ஆடுகளை அறிவார், அவை அவரைப் பின் தொடரும். அவர் நம்மீது அன்பு செலுத்துகிறார், ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளார் என்பதை தெரிவிக்க வேறு சரியான வழியில்லை. மந்தை அவர் இட்டுச் செல்வார், அவரது மந்தை அவருக்குச் செவிசாய்க்கும் என இயேசு கூறுகிறார். வாழ்க்கை போராட்டங்களுக்கு மத்தியில் நமது சொந்த உள்ளக் மந்தையை குமுறல்களையும், ஆதங்கத்தையும் மட்டுமே கேட்கிறோம். மாறாக நமது நல்லாயன் குரலுக்குச் செவி கொடுப்போமா! நாம் செவி கொடுக்க அவரை வேண்டுவோம்.

இயேசுவின் குரலை அறிந்து அவருக்கு எவ்வாறு செவி கொடுக்கப் போகிறோம்? செபம் சொல்லிய பின் மௌனம் காப்போம். இறைவார்த்தையை வாசிப்போம். வேறு வழிகளும் உண்டு. நமக்கு எது சிறந்த வழி என்பதை தியானித்தறிவோம். பின்னர் அவரை இட்டுச் செல்ல விட்டுவிடுவோம். அவரை நம்மை கைவிட மாட்டார். தந்தையாகிய கடவுள் அனுப்பிய பணியை இயேசு விரும்பி செய்தார். நமக்காக உயிர் நீத்தார். அவரது மந்தையிலுள்ள ஆடுகளுக்கு மட்டுமல்லாது வெளியில் உள்ள அனைவருக்கும் மீட்பு கொடுக்க அவர் உயிர்த்தெழுந்தார். ஒரே மந்தை ஒரே ஆயன் இருக்க வேண்டும் என்பதற்காக உலக மாந்தர் அனைவரையும் ஒன்றிணைக்க அவர் வந்தார்.

நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதை மீண்டும் நினைவுப்படுத்தப்படுகிறோம். அவர் மீது அளவு கடந்த பற்றும் பாசமும் இல்லாவிட்டால், எவரும் தம் பிள்ளைகள் என்று ஒருவர் அழைக்க மாட்டார். நாம் அவரின் ஒரே மகன்/மகள் என்பது போல கடவுள் நம் ஒவ்வொருவரையும் நேசிக்கிறார். கிறிஸ்துவில் நாம் ஒரே குடும்பம் என்பதால், நமது நல்லாயனின் குரலுக்குச் செவி சாய்ப்போம் அவரது திருப்பெயரில் நம்பிக்கை கொள்வோம்.

**இன்றைய வாசகங்கள்:**

திப. 4: 8-12;

திபா. 117: 1, 8-9, 21-23, 26, 28-29;

1யோவா. 3: 1-2;

யோவா. 10: 11-18

INTERNAL CIRCULATION ONLY
BUL 17/2021
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

25 ஏப்ரல் 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH பாஸ்கா காலம் 4ம் ஞாயிறு (நல்லாயன் ஞாயிறு)

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்: **எதிர்நோக்கில் உயிர்ப்பு**



# ஒரே மந்தை ஒரே ஆயன்

இன்றைய வாசகங்களில் இரண்டு அம்சங்கள் நம் மனதைத் தொடுகின்றன. கட்டுவோர் நீக்கிய கல்லே மூலைக்கல்லாகிறது. அந்த மூலைக்கல் இயேசு இயேசு என நாம் படிக்கக் கேட்கிறோம். பிறவியிலேயே முடமான பிச்சைக்காரரை பேதுரு குணமாக்குகிறார். அந்த நபரை எவ்வாறு குணமாக்கினீர்கள் என அதிகாரிகள் கேட்கும் போது, இயேசுவின் பெயரால் அந்த முடவரைக் குணமாக்கியதாக பேதுரு பதிலளிப்பார். இயேசுவை மரணத்திற்கு அனுப்பினர் என அவர்கள் மீது அவர் குற்றச்சாட்டுவார். மனுக்குலத்தை மீட்கக்கூடிய ஒரே பெயர் இயேசு என அவர் கூறுவார்.